# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி - 2



பதிப்பாசிரியர்

முனைவர் ஆ. சரவணன்

# தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு

**(தேசியக் கருத்தரங்கம்)**

SUD/

முதன்மைப் பதிப்பாசிரியர் : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
பதிப்பாசிரியர் : **முனைவர் ஆ. சரவணன்**
பதிப்புரிமை : **முனைவர் ச. அரிச்சந்திரன்**
முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018
வெளியீடு : **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641 029.
கணினியாக்கம் : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XXVIII + 430 = 458
விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 88 - 2**

# Tribes of Tamil Nadu ; History Society and Culture

Chief Editor : **Dr. S. Arichandran**
Editor : **Dr. A. Saravanan**
Copyright's : **Dr. S. Arichandran**
First Edition : August, 2018
Published : **Department of Tamil (SF)**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XXVIII + 430 = 458
Prize : **Rs. 400/-**

Tel : (


| | | |
|---|---|---|
| 102. | உத்திரகண்ட் மாநில பழங்குடியினர் நடனங்கள்<br>**ஆ. எஸ்தர் பிரதீபா** | 670 |
| 103. | திராவிடப் பழங்குடியினர் மொழி பிராகுயி<br>**முனைவர் அ. முபாரக் அலி** | 675 |
| 104. | சோளகர் தொட்டி<br>**முனைவர் இரா. மணிமேகலை** | 680 |
| 105. | களப்பணியும் களப்பணியாளரும்<br>**முனைவர் ஆ. சண்முகம் பிள்ளை** | 684 |
| 106. | Telugu Article - Dr. S. Saratha | 694 |
| 107 | Telugu Article - Prof. K. Anandan | 698 |
| 108. | இந்தியப் பழங்குடி மக்களின் வாழ்வும் தனித்துவமும்<br>**முனைவர். இரா. சசிகலா** | 707 |
| 109. | கொண்டனூர் இருளர்களின் வாழ்க்கை முறைகள்<br>**திருமதி சுகுணா** | 711 |
| 110. | இருளர் பழங்குடியினர் வாழ்வியல்<br>**முனைவர் மொ. இரவிக்குமார்** | 714 |
| 111. | தூமனூர் கரட்டிகா குல இருளர்களின் வாழ்வியல் சடங்குகள்<br>**முனைவர் ச. அரிச்சந்திரன்** | 723 |
| 112. | முன்னோர் வழிபாட்டு நம்பிக்கை (படுகர்கள் தோடர்கள்)<br>**முனைவர் கோ. சுனில்ஜோகி** | 728 |
| 113. | நீலகிரியைப் பாதுகாத்த பழங்குடிகள்<br>**முனைவர் செ. துரைமுருகன்** | 734 |
| 114. | ஆண்டிப்பட்டி வனப்பகுதி மலசர் பழங்குடியினரின் வாழ்வியலில் புறக்காரணிகளின் தாக்கங்கள்<br>**முனைவர் க. முருகேசன்** | 740 |
| 115. | பழங்குடிகளும் குலக்குறியமும்<br>**முனைவர் கு. முத்துக்குமார்** | 747 |
| 116. | Ethnomedicinal Plants used by the Irula tribals of the Sirumugai, Western Ghats of Tamil Nadu, India<br>**H. Abdul Kaffor A. Venkatachalapathi, S. Jagathes Kumar and T. Baluprakash** | 753 |

# 114. ஆண்டிப்பட்டி வனப்பகுதி மலசர் பழங்குடியினரின் வாழ்வியலில் புறக்காரணிகளின் தாக்கங்கள்

**முனைவர் க. முருகேசன்**
தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641029

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்து மலைகளிலும் குகைகளிலும் காடுகளிலும் வாழ்ந்தபோது மண்ணின் தன்மைக்கேற்பத் தன் வாழ்வியலை மாற்றியமைத்துக் கொண்டான். ஐந்நில பாகுபாடுகளைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டுவதைக் கொண்டும் சங்க இலக்கியங்கள் அந்தந்த நிலம் சார்ந்த ஒழுகலாறுகளைத் திறம்பட எடுத்துரைப்பதைக் கொண்டும் ஆதித் தமிழனின் கருவறையாகக் குறிஞ்சி நிலம் திகழ்ந்துள்ள தன்மையை அறிய முடிகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகத் திகழும் ஆண்டிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வனப்பகுதியில் வாழ்கின்ற மலசர் இனப் பழங்குடி மக்களின் வாழ்வியலில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அத்தகைய மாற்றங்களுக்குக் காரணமாக அமையக் கூடிய புறக்காரணிகளையும் சுட்டிக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மலையும் மக்களும்




தாயின் மடியில் படுத்துத் தவழ்ந்து மகிழும் குழவியைப் போல இயற்கை அன்னையின் மடியாகிய மலையில் ஆதிமனிதன் படுத்துத் துய்த்து வாழ்ந்து தனக்கெனத் தனித்த அடையாளத்தைத் தக்க வைத்துக் கொண்டிருந்தான். அமராவதி அணையின் மேல்பகுதி மலையில் பழனிக்கும் கொடைக்கானலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மலசர் இனமக்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வந்தனர். இவர்களின் வாழ்வில் தொன்றுதொட்டு நிலவி வந்த கூறுகள் அவர்கள் விரும்பிப் பின்பற்றும் நடைமுறைகளாகவும் இயற்கையோடு இயற்கையாக